2007 ஏப்ரல் 9]

வசதி இல்லாத, கிணற்று நீர்ப் பாசனத்தையே நம்பி இருக்கிற பகுதிகள். அதிலும் அங்கே அடிக்கடி கிணறுகளில் நீர் வற்றி வறண்டுவிட்டு, விவசாயத்திற்கு பாதிப்பாக இருக்கிற காரணத்தால், இப்போது அமைச்சர் அவர்கள் அறிவித்த இரண்டு தடுப்பணைகள் கட்டப்பட்டிருந்தாலும், இன்னும் அந்த ஊராட்சிகளிலே பல தடுப்பணைகள் கட்டுவதற்கு நீர்த் தேக்கம் செய்து, கிணற்றுக்கு நீர் ஊற்று பெறுவதற்கு நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன. ஆகவே, வாய்ப்புகள் இருக்கிற பகுதிகளில், நீர் ஓடைகள் இருக்கிற பகுதிகளில் இன்னும் கூடுதலாக கசிவுநீர்க் குட்டைகளைக் கட்டுவதற்கு, தடுப்பணை கட்டுவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9–45

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1997–98-லும் பல கசிவுநீர்க் குட்டைகள் கட்டப்பட்டிருக்கின்றன. நடப்பு ஆண்டிலும்கூட 2007–2008-வது ஆண்டில் கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட காவேரிபுரத்தில் ரூபாய் ஒரு இலட்சம் செலவில் ஒரு பெரிய தடுப்பணையும், ரூபாய் ஒரு இலட்சம் செலவில் இரண்டு சிறிய தடுப்பணைகளும் கட்டப்படவுள்ளன.

மேலும், கருங்கல்லூர் கிராமத்திலே ரூபாய் ஒரு இலட்சம் செலவில் ஒரு பெரிய தடுப்பணையும், ரூபாய் ஒரு இலட்சம் செலவில் 2 சிறிய தடுப்பணைகளும், லக்கம்பட்டியில் 6 இலட்சம் ரூபாய் செலவில் இரண்டு கசிவுநீர்க் குட்டைகளும், மொத்தம் ரூபாய் 10 இலட்சம் செலவில் கட்டப்பட பரிசீலனையில் இருந்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 24, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

வினா எண் 25, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி, மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர் அவர்கள்.

25—

குடியிருப்புகள்

***380—திரு. சி. கோவிந்தசாமி:**

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2007 ஏப்ரல் 9

திருப்பூரில் குடியிருப்பு பற்றாக்குறைக்கேற்ப குடியிருப்புகள் மற்றும் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன், வீட்டுவசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருப்பூரில் ஏறத்தாழ 620 வீடுகளும், 8,339 வீட்டுமனைகளும் போடப்பட்டு அனைத்தும் ஒதுக்கீடு செய்யப்பட்டு முடிந்துவிட்டது. மேலும், அங்கேயுள்ள தேவையை உணர்ந்து, மன்னறை என்ற பகுதியில் இடம் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நில உடைமையாளர்களோடு கலந்துபேசி, சுமுகமாக இடங்களைப் பெற்றுத் தருவார் என்று சொன்னால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, உடனடியாகப் பணிகள் நிறைவேற்றப்படும்.

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் பகுதி—நான் அடிக்கடி இங்கே சொல்வது வழக்கம், அனைவருக்கும் தெரியும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தெரியும்—ஏராளமான மக்கள் திருப்பூரிலே வேலை காரணமாக இன்றைக்குக் குடியேறி வருகிற காரணத்தினால், குடியிருப்பதற்கு வீடுகள் கிடைக்காமல் மிகப்பெரிய சிரமங்களுக்கு ஆளாகின்றார்கள். ஓடைகளின் ஓரங்களிலே குடிசைகள்போட்டு இன்றைக்குத் தங்குகிற அளவிற்கு நிலைமை மிக மோசமாக இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, திருப்பூரினுடைய தனித் தன்மையைக் கவனத்திலேகொண்டு, அங்கே மற்ற நகரங்களைவிட நிலத்தினுடைய மதிப்பும் கொஞ்சம் கூடுதலாகத்தான் இருக்கிறது. இருந்தாலும் அந்தத் தேவையைக் கணக்கிலேகொண்டு, கொஞ்சம் நகரத்திற்கு வெளிப் பகுதியிலாவது, நிலங்களைக் கையகப்படுத்தி வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலில் குறிப்பிட்டதைப்போல, இடங்களைத் தேர்வு செய்வதில் பிரச்சினை இல்லாமல் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுமுகமாக நில உடைமையாளர்களைச் சந்தித்து துறைக்கு இடத்தினைப் பெற்றுக் கொடுப்பார்கள் என்றால்—எந்தத் திட்டத்தையும் உடனடியாக விரைந்து செயல்படுத்த வேண்டுமென்றுதான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு ஆணை பிறப்பித்திருக்கிறார்கள் — கூட்டத் தொடர் முடிந்தவுடன், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அழைத்தால், நானும் அங்கே சென்று உடனடியாக இடம் தேர்வு செய்கின்ற பணியில் ஈடுபடுவேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2007 ஏப்ரல் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலம் வாங்குவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. ஆனால், நான் ஏற்கெனவே சொன்னது மாதிரி, மற்ற நகரங்களைவிட, நிலத்தினுடைய மதிப்பு சற்றுக் கூடுதலாக அங்கே இருக்கிறது. ஆகவே, அதை அரசு கவனத்தில்கொண்டு, எந்த விலைக்கு வந்தாலும் வாங்கலாம் என்கிற ஆலோசனையைச் சொல்கிறேன், அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு, சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் அதற்கான முயற்சிகளை எடுக்க நான் தயார். ஆகவே, திருப்பூரினுடைய நில மதிப்பு அதிகரித்திருக்கிற சூழ்நிலைகளுக்கேற்ப, அரசு அந்த விலை மதிப்பை அதிகரிக்க வேண்டும். மற்ற நகரங்களைப்போல, மாநிலம் முழுவதும் ஒரேமாதிரியான விலை நிர்ணயம் என்றிருந்தால், அங்கே இடம் வாங்க முடியாது. ஆகவே, அந்தத் தனித் தன்மையைக் கணக்கிலேகொண்டு, கூடுதல் விலையை நிர்ணயம் செய்தால், நிச்சயமாக வாங்குவதற்கு வாய்ப்பு இருக்கிறது. திருப்பூரினுடைய அந்த அவசிய குடியிருப்புத் தேவையைக் கணக்கிலேகொண்டு, வாய்ப்பிருந்தால், அடுக்குமாடி வீடுகள் கட்டினால்கூட நிலத்தினுடைய அளவு குறைவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதனால், கூடுதலாக சாதாரண மக்கள் குடியிருக்க வாய்ப்பு வரும். அதையும் அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலம் எடுப்பு அல்லது நிலம் கையகப்படுத்துகின்றபோது, அந்த ஊரினுடைய guideline value அல்லது சந்தை விலை இரண்டையும் கணக்கிலே எடுத்துக்கொண்டுதான் அந்த நிலங்கள் ஆர்ஜிதப்படுத்தப்படுகின்றன. எனவே, நில உடைமையாளர்களை அழைத்துப் பேசி சுமுகமாகத் தீர்வு கண்டால் உடனடியாகத் திட்டத்தை விரைவுபடுத்துவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரில் மக்கட்தொகைப் பெருக்கம் அதிகரித்திருக்கின்ற காரணத்தினால், சென்னைக்கு அருகிலே இருக்கின்ற தொகுதிகளாக இருக்கின்ற ஸ்ரீபெரும்புதூர், திருப்போரூர் போன்ற பகுதிகளிலே

வீட்டுவசதி வாரியத்தினுடைய பணிகளை மேற்கொள்ள, நிலம் எடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 9–50

மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது எல்லோருக்கும் தெரிந்த ஓர் உண்மை; பக்கத்திலே துணை நகரங்களை உருவாக்க வேண்டும், சென்னையிலே உள்ள நெருக்கடியைப் போக்க வேண்டுமென்று சென்னையைச் சார்ந்து இருக்கக்கூடிய, சுற்றி இருக்கக்கூடிய பகுதிகளில் இடங்கள் தேர்வு செய்யப்படுவதும், அதற்கு எதிர்ப்புகள் வருவதும், நடைமுறையில் உள்ளது. இருப்பினும், ஆங்காங்கு மக்களைச் சந்தித்து நம்முடைய சட்டப்பேரவை உறுப்பினர்களுடைய துணையோடு, இடங்களைத் தேர்வு செய்து சாதாரண ஏழையெளிய, நடுத்தர மக்களினுடைய வீட்டுமனைத் தேவைகளை நிறைவு செய்வதற்குரிய பணியில் இந்தத் துறை முழுமையாக ஈடுபட்டு இருக்கிறது. அப்படிப்பட்ட ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு வழங்கியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 26, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வீ. ராமநாதன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

26—

துணை சுகாதார நிலையம்

***2513—திரு. கே.வீ. ராமநாதன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி தொகுதி, பூனாச்சி ஊராட்சியில் மிக்வும் பிற்பட்ட, ஆதி திராவிட மக்கள் வசிக்கும் நத்தமேட்டில் துணை சுகாதார நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?